10th April 1958]

(*b*) the reasons for the delay; and

(*c*) the action taken by the Government to expedite these cases?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Fifty-seven cases are pending in the South Arcot District of which 9 cases relate to Tindivanam taluk.

(*b*) & (*c*) It is reported that the delay is due to the inadequacy of the staff attending to the Land Acquisition work and that the question of strenghening this staff has been taken up.

Sri M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, இந்த கட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்கு வழங்கும் விஷயத்தில் அதிகமான காலதாமதம் ஏற்படுகிறது. உடனடியாக நில ஆர்ஜிதம் செய்யும் சிப்பந்திகளை அதிகப்படுத்தி ஹரிஜனங்களுக்கு நிலங்களை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri P. KAKKAN : கட்டு மனைகள் வழங்குவதிலே அரசாங்கம் அதிக அக்கறை எடுத்து வருகிறது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Agricultural College

* 692 *Q*.—Sri A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to start a new Agricultural College?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

Mudukulathoor area

* 693 *Q*.—Dr. Srimathi SATHIYAVANIMUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the beneficial measures adopted by the Harijan Welfare Department in the Mudukulathoor area after the recent disturbances; and

(*b*) the details thereof?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes Sir.

(*b*) the Government have ordered the construction of houses for the riot-affected persons in the whole of the Ramanathapuram district including Mudukulathoor area at an estimated cost of Rs. 16·92 lakhs. They have also sanctioned the starting of a Co-operative Match Factory and a Brick Makers' Co-operative Society at Paramakudi for the benefit of the riot-affected persons. 9-20 a.m.

Dr. Srimathi SATHIYAVANIMUTHU : முதுகளத்தூர் கலவரத்திற்கு காரணம், போக்குவரத்திற்கு சரியான ரோடுகள் இல்லை என்றும், தனிப்பட்ட போலீஸ் ஸ்டேஷன் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டது. இதில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் கணிசமாக இருந்தால் ஆதிக்க வெறி ஏற்படுகிறது, அது பரவலாக அமைக்கப்பட வேண்டும் என்று முதுகளத்தூர் கலவரம் சம்பந்தப்பட்ட விவாதத்தின் போது யோசனை கூறப்பட்டது. அதைப்பற்றி சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா ?